அரசு மேல் நிலைப்பள்ளி, பனைஓலைப்பாடி - 606705.

பாடம் - 1

# நுண்ணினப் பொருளியல் ஓர் அறிமுகம்

## இரண்டு மதிப்பெண் வினா விடை:-

**1. பொருளியல் என்றால் என்ன?**

பொருளியல் என்றால் "இல்லங்களின் நிர்வாகம்" என்று பொருள்படும்.

**2. நுண் பொருளியல் என்றால் என்ன?**

தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகள் நுண்ணியல் பொருளியல் ஆகும்.

**3. பண்டங்கள் என்றால் என்ன?**

பண்டங்கள் மனித விருப்பங்களை பூர்த்தி செய்கின்றன. பணிகளையும் சேர்த்தே பண்டங்கள்" என்ற சொல் குறிக்கும்.

**4. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.**

| பண்டங்கள் | பணிகள் |
|---|---|
| தொட்டுணரக் கூடியவை | தொட்டுணர முடியாதவை |
| உருவ வடிவமுடையவை | உருவ வடிவமில்லாதவை |

**5. இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.**

இயல்புரை அறிவியல் உள்ளதை உள்ளவாறு கூறுகிறது.

**6. பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.**

பொதுக் கருத்திலிருந்து தனிக்கருத்தை பெறுவது பகுத்தாய்வு முறை எனப்படும்.

## மூன்று மதிப்பெண் வினா விடை:-

**1. ‘என்ன உற்பத்தி செய்ய வேண்டும்” என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?**

- உணவு, உடை, வீட்டுப்பொருட்கள் போன்றவற்றை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பரப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்வதா?
- விவசாயப் பொருட்களை அதிகம் உற்பத்தி செய்வதா? தொழிற்சாலை பண்டங்களை மற்றும் பணிகளை அதிகம் உற்பத்தி செய்வதா?
- அடிப்படைக் கல்விக்கு அதிகம் செலவு செய்வதா? அல்லது உயர்கல்விக்கு அதிகம் செலவு செய்வதா?

**2. பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.**

**நுகர்வு** : மனித விருப்பங்களை நிறைவு செய்யும் நுகர்வு பொருளாதார நடவடிக்கையின் துவக்கப் புள்ளியாக விளங்குகிறது.

**உற்பத்தி** : உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும்.

**பகிர்வு** : உற்பத்தி என்பது உற்பத்தி காரணிகளின் பங்களிபபு மூலம் கிடைக்கும் விளைவாகும்.

**பரிமாற்றம்:** பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது.

**3. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?**

1. **புலனாகாப் பொருட்கள்** : புலனாகாப் பொருட்களுக்கு உருவ அடையாளம் இல்லை.
2. **பலதரப்பட்ட பண்டங்கள்** : பணிகள் பல்வேறு இடங்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணியில் வேறுபடுகினறன.
3. **அழியக்கூடியவை** : பண்டங்களை போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது.

**4. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?**

- பயன்பாடு உளவியல்
- பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை

www.Padasalai.Net

- பயன்பாடு தனித்துவம், சார்ந்தும் இருக்கும்.

**5. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?**

| நுண்ணியல் பொருளியல் | பேரியல் பொருளியல் |
|---|---|
| தனிப்பட்ட பொருளாதார முடிவுகளை விளக்குவது | முழுப் பொருளாதாரத்தின் முடிவுகளை விளக்குவது |
| பொருளாதாரத்தின் சிறு பகுதிகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. | நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. |
| இது விலைக் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. | இதுவருவாய் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. |

**6. இயல்புரை பொருளியல் மற்றும் நெறியுரை பொருளியல் ஒப்பிடுக.**

- இயல்புரை பொருளியல் என்பது உள்ளதை உள்ளவாறு காணும்.
- இயல்புரைப் பொருளியல் என்பது பொருளாதார நிகழ்வுகளை விவரிக்கும் ஓர் இயல்.

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி**

- தொன்மை காலத்தை உணர்த்தும் ஆடம்ஸ்மித்தினுடைய செல்வ இலக்கணம்
- புதிய தொன்மை காலத்தை உணர்த்தும் மார்ஷலின் நல இலக்கணம்
- புதிய யுகத்தை உணர்த்தும் பற்றாக்குறை இலக்கணம்
- நவீன யுகத்தை உணர்த்தும் சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணம்.

**எல்லை**

- பொருளியல் மனித நடவடிக்கைகளோடு தொடர்புடையது
- பகுத்தறிவுள்ள அல்லது சாதாரண மனிதனின் நடவடிக்கைகளே பொருளியலின் பாடப்பொருளாகும்.
- மனிதனின் செல்வம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் பொருளியலின் பாடப்பொருளாகும்.

**2. பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக**

**பகுத்தாய்வு முறை :** பொது கருத்திலிருந்து தனி கருத்தை பெறும் முறை பகுத்தாய்வ முறை.

படிகள் : அனுமானங்களின் வாயிலாக கருதுகோள்களை உருவாக்க வேண்டும்.

தொகுத்தாய்வு : தனி கருத்திலிருந்து பொதுகருத்தை பெறும் முறை தொகுத்தாய்வு முறை

படிகள் : கருதுகோள்களை சரிபார்த்தல் (உ.ம்.) ஏங்கலின் விதி

* * *

## பாடம் - 2
## நுகர்வுப் பகுப்பாய்வு

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. பயன்பாட்டை வரையறு**

பண்டங்கள் மற்றும் பணிகளை நுகரும்போது நுகர்வோருக்கு கிடைப்பதாக நுகர்வோர் கருதுவது விருப்பத்தை நிறைவு செய்யும் ஆற்றல்.

**2. நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.**

நுகர்வு ஒரு முக்கியமான பொருளாதார நடவடிக்கை ஆகும். நுகர்வின் தன்மை மற்றும் அளவின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கைத் தரம் தீர்மானிக்கப்படுகிறது.

**3. விலைத்தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி**

- முற்றிலும் நெகிழ்ச்சியுள்ள தேவை
- முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை
- மிகைத் தேவை நெகிழ்ச்சி
- குறைவான நெகிழ்ச்சியுள்ள தேவை
- அலகுத் தேவை நெகிழ்ச்சி

**4. சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?**

ஒரு வளைக்கோட்டில் உள்ள இரு பண்டங்களின் அனைத்து கலவையும் நுகர்வோருக்கு சமஅளவு திருப்தியைத் தருமாயின் அது சமநோக்கு வளைகோடாகும்.

**5. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.**

நுகர்வோர் எச்சம் = தகுவிலை - உண்மை விலை

நுகர்வோர் எச்சம் = TU - (PxQ)

இதில் TU = மொத்தப் பயன்பாடு

P = விலை

Q = பண்ட அளவு

**6. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன.**

- கிஃபன் பண்டங்கள் அல்லது தாழ்ந்தரக பண்டங்கள் தேவை விதியின் விதி விலக்காகும்.
- தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும்போது ஏழைகள் அவற்றைக் குறைவாக வாங்குவர். விலை கூடும்போது அதிகம் வாங்குவர்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக.**

அ). விருப்பங்கள் எண்ணற்றவை ஆ). விருப்பங்கள் பழக்கவழக்கங்களாக மாறும் இ). விருப்பங்கள் நிறைவேறக் கூடியவை

**2. நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை வரைபடத்துடன் விளக்குக.**

மார்ஷலின் நுகர்வோர் எச்ச இலக்கணம் ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட வாங்குவதேமேல் என முடிவு செய்து கொடுக்க நினைத்த விலைக்கும் நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம் எனப்படும்.

**3. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தை தருக.**

**இலக்கணம்** : மார்ஷலின் நுகர்வோர் எச்ச இலக்கணம் ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட வாங்குவதேமேல் என முடிவு செய்து கொடுக்க நினைத்த விலைக்கும் நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம் எனப்படும்.

எடுகோள்கள்:-

1). பயன்பாட்டை அளவிட முடியும் 2). பணத்தின் இறுதிநிலை பயன்பாட்டில் மாற்றமில்லை

3). பதிலீட்டுப் பண்டங்கள் இல்லை

**4. தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக.**

- குறைந்த விலையில் அதிக பொருட்களை வாங்குவது தேவை விரிவு
- அதிக விலையில் குறைநத் பொருட்களை வாங்குவது சுருக்கம்

**5. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?**

1). சமநோக்கு வளைகோடு கீழ்நோக்கிய சரிவைக் கொண்டது. 2). சமநோக்கு வளைகோடுகள் தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும். 3). சமநோக்கு வளைகோடு வெட்டிக்கொள்ளாது 4). சமநோக்கு வளைகோடுகள் x அச்சையோ y அச்சையோ தொடாது

**6. நுகர்வோர் சமநிலை என்ற கருத்தை சுருக்கமாக விவரி**

- சமநோக்கு வளைகோட்டை அடி மட்டத்தில் வரவு செலவுக் கோடு தொடும் புள்ளியில் நுகர்வோர் சமநிலை அடைகிறார்
- AB என்ற வரவு செலவுக் கோடு 1C3 என்னும் சமநோக்கு வளைகோட்டை T என்ற புள்ளியில் தொடுகிறது.
- இந்த 1C3 வளைகோடே அதிக அளவு திருப்தியைத் தரும் வளைகோடாகும்.
- இந்த சமநிலைப் புள்ளியில் 1Cயின் சாய்வு MRSXY-யைக் குறிக்கிறது.

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.**

ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது என்று மார்ஷல் இவ்விதியை வரையறை செய்கிறார்.

**எடுகோள்கள்:-**

- பயன்பாடு எண்ணளவையில் அளவிடப்பட வேண்டும்.
- நுகர்வோர் பகுத்றிவாளராக இருக்க வேண்டும்.
- நுகரப்படும் பண்ட அளவு ஒரே சீரானதாக இருக்க வேண்டும்

**அட்டவணை:-**

| ஆப்பிள் அலகுகள் | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 35 | 15 (35-20) |
| 3 | 45 | 10 (45-35) |
| 4 | 50 | 5 (50-45) |
| 5 | 50 | 0 (50-50) |
| 6 | 45 | -5 (45-50) |
| 7 | 35 | -10 (35-45) |

**வரைபடம்**




Fig. 1

**வரைபட விளக்கம்:**

x அச்சு இறுதிநிலைப் பயன்பாடு
y அச்சு பூஜ்ய பயன்பாடு, எதிர்மறை பயன்பாடு

**2. தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை?**

விலைத் தேவை நெகிழ்ச்சியை நான்கு வகைகளில் அளவிடலாம்.

- விழுக்காட்டு முறை
- மொத்தச் செலவு முறை
- புள்ளி அல்லது வடிவியல நெகிழ்ச்சி

* * *

## பாடம் - 3

## உற்பத்தி பகுப்பாய்வு

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. உழைப்பு - வரையறு**

மார்ஷலின் கூற்றுப்படி, உழைப்பு என்பது உற்பத்தி காரணியான உழைப்பாளர் வருமானம் ஈட்டுவதற்காக தனது உழைப்பு சக்தியைப் பயன்படுத்துவது ஆகும்.

**2. உற்பத்தி சார்பினை குறிப்பிடுக.**

பல்வகை உள்ளீடுகளின் அளவுகளுக்கும் வெளியீட்டு பொருள்களின் அளவுகளுக்கும் இடையே உள்ள தொடர்பே உற்பத்தி சார்பு ஆகும்.

**3. காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு**

ஏற்கனவே உள்ள ஓர் உற்பத்திக் காரணியின் அளவில் ஒரு அதிகரிப்பு செய்யும்போது மொத்த உற்பத்தியில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு உற்பத்தியே இறுதிநிலை உற்பத்தி ஆகும்.

$MP = \Delta TP / .N$ அல்லது $MP = TP (n) - TP (n-1)$

**4. சம உற்பத்தி செலவு கோடு என்றால் என்ன?**

ஒரு நிறுவனம் குறிப்பிட்ட அளவு பணச் செலவில் வாங்க கூடிய இரு காரணிகளின் பல தொகுப்புகளைக் குறிப்பிடுவதே சமஉற்பத்தி செலவுக் கோடு ஆகும்.

**5. உற்பத்தியாளர் சமநிலையை அடைய நிபந்தனை யாது?**

- சமநிலை அளவு செலவுக்கோடு, சமஉற்பத்தி வளை கோட்டிற்கு தொடு கோடாக அமைய வேண்டும்.
- அந்த தொடு புள்ளியில் சமஉற்பத்தி வளைகோடு தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும் அல்லது MRTSLK குறைந்து செல்லும்.

**6. அளிப்பு கோடு மேல்நோக்கி செல்வதன்காரணம் என்ன?**

ஒரு பண்டத்தின் விலை உயர்வால் அளிப்பு அதிகரிக்கும்; விலை குறைந்தால் அளிப்பும் குறையும். ஆகவே அளிப்பு கோடானது கீழிலிருந்து மேல்நோக்கி செல்லும்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?**

நிலம் என்பது முதன்மை உற்பத்தி காரணியாகும். நிலம் என்பது செயலற்ற உற்பத்தி காரணியாகும். நிலம் என்பது இயற்கையின் கொடை

**2. அளிப்பு நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?**

பொருட்களின் தன்மை, உற்பத்தி செலவு, தொழில்நுட்ப நிலை, காலஅளவு

**3. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?**

துவக்கப் பணி, புத்தாக்கப் பணி, ஒருங்கிணைத்தல்

**4. காப் - டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.**

பொருளியலில் எளிமையானதும், பரவலாகப் பயன்படுத்தப்படும் உற்பத்தி சார்பு காப் - டக்லஸ் உற்பத்தி சார்பு ஆகும். காப் - டக்லஸ் உற்பத்தி சார்பு பின்வருமாறு:

$Q=AL\ \alpha K\beta$
L = உழைப்பு
K= மூலதனம்
$\alpha+\beta > 1$ = வளர்ந்து செல் விகித விளைவு விதி
$\alpha+\beta 1$ = மாறா விகித விளைவு விதி
$\alpha+\beta < 1$ = குறைந்த செல் விகித விளைவு விதி

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விளக்குக.**

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மாறும் உற்பத்தி காரணிகளை பல்வேறு இணைப்பில் ஈடுபடுத்தி, ஒரு குறிப்பிட்ட அளவு உற்பத்தி செய்வதைக் காட்டும் கோடு சமஅளவு உற்பத்திக்கோடு என அழைக்கப்படுகிறது.

1). சம உற்பத்திக் கோடுகள் எதிர்மறைச் சரிவைக கொண்டது.

2). தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.

3). சமஉற்பத்திக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது.

4). உயர்சம உற்பத்திக்கோடு உயர் உற்பத்தி அளவை குறிக்கிறது.

5). சம உற்பத்திக் கோடு x அச்சினையோ அல்லது y அச்சினையோ தொடாது.

**2. அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்கள் விவரி.**

பொருளாதார சிக்கனம் இரு வகையாக பிரிக்கப்படுகிறது.

1). அகச்சிக்கனங்கள்
2). புறச்சிக்கனங்கள்

**1). அகச்சிக்கனங்கள் :** அகச்சிக்கனம் என்பது நிறுவனம் பொருளின் உற்பத்தி செலவினை குறைத்து பெறும் நன்மையினை குறிக்கும்.

**2). புறச்சிக்கனங்கள் :** புறச்சிக்கனகங்கள் என்பது நிறுவனத்திற்கு வெளியே ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தியின் முறைகளில் ஏற்படும் மேம்பாடுகளைக் குறிக்கும்.

* * *

# பாடம் - 4

## செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. செலவை வரையறு.**

ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள்

**2. செலவுச் சார்பை வரையறு.**

மொத்த செலவிற்கும் மற்றும் உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பினை வெளிப்படுத்துகிறது. செலவுச் சார்பை இவ்வாறு எழுதலாம்

**3. மாறாச் செலவு என்றால் என்ன?**

மாறாச் செலவுகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை

(எ.கா.) நிறுவனத்தின் வாடகை, காவலரின் ஊதியம்

**4. வருவாயை வரையறு.**

ஒரு விற்பனையாளர் தன் பண்ட பரிமாற்றத்தின் மூலம் ஈட்டுகின்ற பணம் வருவாய் எனப்படும்.

**5. வெளியுறு செலவு - வரையறு.**

உற்பத்தி காரணிகளை வாங்க மற்றவர்களுக்கு செலுத்தும் செலுத்துகையே வெளிப்படையான செலவு எனப்படும்.

(எ.கா.) 1). உழைப்பாளர்களின்கூலி, 2). கட்டிட வாடகை

**6. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?**

மீட்டு எடுக்க முடியாத கடந்த காலச்செலவுகள் அமிழ்த்தப்பட்ட செலவு ஆகும்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. பணச் செலவு- உண்மைச் செலவு வேறுபாடுகளைக் கூறுக.**

- உற்பத்திச் செலவு பணத்தால் குறிப்பிடப்பட்டால் அது பணச் செலவு எனப்படும்.
- வேறு வகையில் கூறினால், ஒரு நிறுவனம் ஒரு பொருளை உற்பத்தி செய்ய பணமாக செயல்படுகின்ற அனைத்து செலவுகளுமே பணச் செலவு எனப்படுகிறது.
- அவை, கச்சாப் பொருட்களுக்கான செலவுகள், உழைப்பதற்கான கூலி மற்றும் சம்பளம், உண்மை செலவு என்பது அனைத்து காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும், சங்கடங்கள் முயற்சிகள் மற்றும் தியாகங்கள் அக்காரணிகளின் உடமையாளருக்கு வழங்கப்படும் இழப்பீட்டு தொகையாகும்.

**2. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.**

- பிற வாய்ப்புச் செலவு என்பது அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும்
- ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேர்ந்தெடுக்கப்படுவதால் அதனுடைய அடுத்த சிறந்த பயன்பாடு விட்டுக்கொடுக்கப்பட வேண்டி உள்ளது.
- எடுத்துக்காட்டாக, ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் நெல் அல்லது கரும்பை விளைக்க முடியும்.
- வாய்ப்புச் செலவு என்பது மாற்றுச் செலவு அல்லது பராமரிப்பு செலவு என்றும் அமைக்கப்படும்

**3. AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.**

சராசரி மொத்த செலவு AC அல்லது சராசரி செலவு AC

- சராசரி செலவு என்பது ஒரு பண்டத்தின் செலவு எனப்படும்
- சராசரி மொத்த செலவு என்பது மொத்த செலவை, உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுப்பதால் கிடைப்பதாகும்.

TC = 1600
Q = 4 எனில்
ATC = 400 ஆகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அதாவது ATC = TC/Q = 1600 / 4 = 400
∴ ATC = 400

இறுதிச் செலவு (MC)

கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை உற்பத்தி செய்வதால் மொத்த செலவில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலை செலவு எனப்படும்.

MC = TC - TCh-1
இதில்,
MC = இறுதிநிலைச் செலவு
TCn(n) = அலகு பண்டத்திற்கான மொத்த செலவு
TCn-1 = h=1 = அலகு பண்டத்திற்கான மொத்த செலவு

எ.கா. TC4 = 1600, TC4-1 = 1400 எனில்
MC = 1600, TC4 = 1000
எனில்,
MC = 300

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. குறுகிய காலச் செலவுக்கோடுகளை தகுந்த படத்துடன் விவரி.**

- மொத்த மாறாச் செலவு
- மொத்த மாறும் செலவு
- மொத்த செலவு
- சராசரி மாறாச் செலவு
- சராசரி மாறும் செலவு
- இறுதிநிலைச செலவு

* * *

## பாடம் - 5

## அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. "அங்காடி" வரையறு.**

அங்காடி என்பது பண்டங்களையும் பணிகளையும் பரிமாற்றம் செய்திட வாங்குவோரும் விற்போரும் இணையும் இடத்தைக் குறிக்கும்.

**2. விலையை ஏற்பவர் யார்?**

நிறைவுப் போட்டியில் நிறுவனங்கள் அங்காடி விலையை ஏற்பவர்களாக உள்ளனர்.

**3. விற்பனை செலவு என்றால் என்ன?**

விற்பனையை அதிகரிக்க அதிக விளம்பரங்களை செய்வதற்காக மேம்கொள்ளும் விளம்பரச் செலவுகள் அனைத்தும் விற்பனைச் செலவுகள் எனப்படுகின்றன.

**4. விலைபேதம் காட்டுதலின் இரண்டு தன்மைகளை கூறுக.**

முதல்நிலை விலைபேதம் காட்டுதல் முற்றிலும் நுகர்வோர் சுரண்டப்படும் நிலை.

இரண்டாம்நிலை விலைபேதம் காட்டுதல் இடபேதம் உள்நாட்டில் ஒரு விலையையும், வெளிநாட்டில் வேறு நிலையையும் பெறுவது.

**5. உபரி சக்தி - விளக்குக.**

முற்றுறிமைப் போட்டியில் நிறுவனங்கள் உச்ச உற்பத்தி அளவைவிட குறைவாகவே உற்பத்தி செய்கின்றனர். எனவே, உபரி சக்தி வீணாக்கப்படுவதாக கருதுகிறது.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. அங்காடியின் இயல்புகள் யாவை?**

அங்காடி என்பது பண்டங்களையும் பணிகளையும் பரிமாற்றம் செய்திட வாங்குவோரும் விற்போரும் இணையும் இடத்தைக் குறிக்கும்.

பண்புகள்:

வாங்குவோரும் விற்போரும் இருப்பர்.

வாங்குவோரும் விற்போரும் நேரடியாகச் சந்தித்துக் கொள்ள வேண்டியதில்லை.

தொலை தொடர்பு சாதனங்கள் மூலம் பரிமாற்றம் நடைபெறும்.

**2. விற்பனைச் செலவு என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.**

முற்றுரிமைப் போட்டியில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி பண்டத்தின் விற்பனையை அதிகரிக்க அதிக விளம்பரங்களை செய்வதற்காக மேற்கொள்ளும் அனைத்து விற்பனைச் செலவுகள் ஆகும்.

எ.கா. தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் போன்றவற்றில் விளம்பரம் செய்தல்

**3. இருவர் முற்றுரிமையின் இயல்புகள் யாவை?**

**இருவர் முற்றுரிமை:** தனிப்பட்ட இரண்டு விற்பனை விற்பனையாளர்களைக் கொண்ட அமைப்பு ஆகும்.

**இயல்புகள் :** ஒவ்வொரு விற்பனையாளரும் போட்டியாளர்களின் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பர்.

இரண்டு விற்பனையாளரும் விற்பனை தொடர்பான உடன்பாடு செய்திருப்பர்.

விற்பனையாளர்கள் முறையற்ற போட்டியிலும் ஈடுபடலாம்.

**4. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

**நிறுவனம் :** பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்து அதற்கு விலையை நிர்ணயிப்பது நிறுவனம் ஆகும். எ.கா. சங்கர் சிமெண்ட்

**தொழில் :** பல நிறுவனங்கள் சேர்ந்தது தொழில் ஆகும். எ.கா. சிமெண்ட் தொழில்.

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. நிறைவு போட்டியின் இயல்புகள் விளக்குக.**

- எண்ணற்ற வாங்குபவர் மற்றும் விற்போர்
- ஓரியல்பான பண்டங்கள் மற்றும் ஒரே மாதிரியான விலை
- உட்புகுதல் மற்றும் வெளியேறுதலில் தடையில்லை
- போக்குவரத்து செலவு இல்லை
- உற்பத்தி காரணிகள் இடம் பெயரும்
- அங்காடி நிலைபற்றி அறிந்திருப்பர்
- அரசின் தலையீடு இல்லை

**2. சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.**

- சில பெரிய நிறுவனங்கள்
- நிறுவனங்களுக்குள் சார்ந்திருத்தல்
- குழுமச் செயல்பாடு
- விளம்பரச் செலவு
- பண்டத்தின் தன்மை
- மாறாத நிலை

* * *

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பாடம் - 6

## பகிர்வு பற்றிய ஆய்வு

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. பகிர்வு என்றால் என்ன?**

பகிர்வு என்பது நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு வருவாயை பகிர்ந்தளிப்பதை குறிக்கும்.

**2. பகிர்வின் வகைகள் யாவை?**

தனிநபர் பகிர்வு, பணிசார் பகிர்வு

**3. வாரம் வரையறு.**

பொருளாதார வாரம் என்பது நிலத்தை பயன்படுத்துவதற்காக மட்டுமே குத்தகைக்காரர் நிலச் சொந்தக்காரருக்கு வழங்கும் பகுதித் தொகை ஆகும்.

**4. பணக்கூலி மற்றும் உண்மைக் கூலியை வேறுபடுத்துக**

**பெயரளவுக் கூலி :** பெயரளவுக் கூலி என்பது ரொக்கமாக வழங்கப்படும் கூலியைக் குறிக்கும்.

**உண்மைக் கூலி :** பண்டங்களாகவோ, பணிகளாகவோ கூலியை வழங்குவது உண்மைக் கூலி எனப்படும்.

**5. வட்டி பற்றி நீ அறிவது யாது?**

முதலைப் பயன்படுத்திக்கொள்ள, அதைப் பெற்றவர்கள் அதை வழங்கியவர்க்கு வழங்கும் வெகுமதியே வட்டி ஆகும்.

**6. இலாபம் என்றால் என்ன?**

தொழில்முனைவோரின் தொழில் திறமையைப் பயன்படுத்துவதற்கான வெகுமதி இலாபம் ஆகும்.

**7. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?**

நீர்மை விருப்பம் என்பது மக்கள் பத்திரங்கள், பங்குகள், மாற்றுச்சீட்டுகள், நிலம், கட்டிடம், தங்கம் போன்றவைகளாக அல்லாமல் ரொக்கமாக பணமாக கையில் வைத்திருப்பதே ஆகும்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.**

1. பெயரளவுக் கூலி அல்லது பணக்கூலி
2. உண்மைக் கூலி
3. துண்டுக் கூலி
4. நோக் கூலி

**2. வாரம் மற்றும் போலி வாரம்: வேறுபடுத்துக.**

**வாரம் :** நிலத்தைப் பயன்படுத்துவதற்கோ கொடுக்கப்படும் வெகுமதியே வாரம் ஆகும்.

**போலி வாரம் :** மனிதனால் உருவாக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பிற உபகரணங்களில் இருந்து பெறப்படும் வருவாயே போல வாரம்

**3. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை சுருக்கமாக கூறுக.**

ஜோசப் ஏ.சும்பீட்டர் புத்தாக்க இலாபக் கோட்பாட்டை எடுத்துரைத்தார்.

சும்பீட்டரின் கூற்றுப்படி, புத்தாக்கம் புனைதல் என்பது கீழ்கண்டவற்றை உள்ளடக்கியது.

1). புதிய பண்டங்களை அறிமுகப்படுத்துதல்
2). புதிய உற்பத்தி முறைகளை அறிமுகப்படுத்துதல்
3). புதிய சந்தைகளைத் தொடங்குதல்.

www.Padasalai.Net

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.**

இக்கோட்பாடு பழமையான கோட்பாடுகளில் ஒன்றாகும்.

**இலக்கணம் :** வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும்.

**விளக்கம் :** ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை குடியேற்றத்தின் மூலம் விளக்குகிறார். மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது முதலில் (A) செழுமையான நல்ல நிலத்தையே பயிர் செய்வர் அதிக மக்கள் குடியேறும்போது நிலத்தின் தேவை அதிகரிக்கும். அதனால் இரண்டாம் (B) தர நிலத்தை அவர்கள் பயிர் செய்வர்.மேலும் அதிக மக்கள் குடியேறும்போது மூன்றாம் (C) தர நிலத்தை அவர்கள் பயிர் செய்ய இயலாது.

- முதல் தர நிலம் அதிக வாரத்தை பெறும்
- இரண்டாம் தர நிலம் குறைந்த வாரத்தைப் பெறும்
- மூன்றாம் தர நிலம் எவ்வித வாரத்தையும் பெறாது. இது வாரமில்லா நிலம்.
  **வரைபடம்**

**திறனாய்வு:**

- உழைப்பு முதல் ஆகியவற்றிற்கும் வாரம் உள்ளதாக நவீன பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.
- ஒரு நிறுவனத்தைப் பொருத்தவர வாரம் விலையோடு அடங்கும்.
- நிறைவுப் போட்டி என்பது நடைமுறையிலும் இல்லை

* * *

**பாடம் - 7**

**இந்தியப் பொருளாதாரம்**

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளை கூறுக.**

- முன்னேறிய பொருளாதார நாடுகள் என்பவை தொழில் மயமான வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதுமான நாடுகளைக் குறிக்கும்.
- அதிக தலா வருவாய் கொண்ட நாடுகள் முன்னேறிய நாடுகள் ஆகும்.

**2. இயற்கை வளங்களைப் பற்றிக் குறிப்பு வரைக.**

ஒரு நாட்டில் இயற்கையிலிருந்து பெறப்படும் வளங்கள் இயற்கை வளங்கள் (எ.கா) காடு, நீர், கனிமவளங்கள்

**3. இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக் கூறு.**

- இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்
- வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது

**4. புதுப்பிக்கப்பட இயலாத ஆற்றல் வளங்கள் தருக**

மறுபடியும் பயன்படுத்த முடியாத தீர்ந்துவிட்டால் மறுபடியும் உருவாக்க முடியாத ஆற்றல் மூலங்கள் புதுப்பிக்கப்பட இயலாத ஆற்றல் வளங்கள் ஆகும்.

**5. “தொழில்நுட்பத் தெரிவு” பற்றி சென் கூறுவது என்ன?**

உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் மூலதன செறிவு நுட்பமுறையில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று சென் குறிப்பிடுகிறார்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. வேளாண்மை பொருளாதாரம் பற்றி அம்பேத்கரின் பொருளாதார கருத்துக்களை கூறுக.**

- 1918-ல் அம்பேத்கர் இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகள் என்ற கட்டுரையை எழுதினார்.
- ஆடம்ஸ்மித்தின் நாடுகளின் செல்வத்தைப்போல் நிலவுடமை ஒருங்கிணைப்பு மற்றும் நிலவுடமை விரிவாக்கம் இவற்றுக்கிடையேயான வேறுபாட்டினை கூறுகிறார்.

**2. கிராம சர்வோதயா - சிறுகுறிப்பு வரைக.**

- உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ புறநகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான் என்று சொன்னார் காந்தியடிகள்.
- கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.

**3. பெருக்கி கருத்தைப் பற்றி V.K.R.V ராவின் பங்களிப்பை எழுதுக.**

- முன்னேற்றம் அடையாத நாடுகளின் முதலீடு வருமானம் மற்றும் பெருக்கி ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு (1952) என்ற ராவ் அவர்களின் புத்தகம் பேரியியல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பு வழங்கியது.

- சிந்தனையாளர், ஆசிரியர் பொருளாதார ஆலோசகர் மற்றும் நேரடி கொள்கை வடிவமைப்பாளர் என்ற பார்வையில் J.M.கீன்சின் அடிகளை பின்பற்றுகிறார்.

**4. நலப்பொருளாதாரம் பற்றி அமர்த்தியா சென்னின் கருத்துக்களை எழுதுக.**

- அமர்த்தியா சென் பொருளியல் அறிஞர் மட்டுமல்ல நன்னெறி தத்துவ அறிஞரும் ஆவார்.
- அவர் சுதந்திரத்தை நேசிப்பவர் மற்றும் மனிதநேய ஆதரவாளர் ஆவார்.

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. இந்தியக் கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி.**

- இரும்புத் தாது
- நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி
- அலுமினியத் தாது (பாக்சைட்)
- மைக்கா
- சுத்திகரிக்கப்படாத எண்ணெய்
- தங்கம்
- வைரம்

**2. காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.**

- கிராமக் குடியரசு
- இயந்திரங்கள்
- தொழில்மயம்
- உற்பத்தி பரவலாக்கம்
- கிராம சர்வோதயா
- உடல் உழைப்பு

* * *

## பாடம் - 8

## இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நிலஉடைமை முறைகள் யாவை?**

- ஜமீன்தாரி முறை
- மஹல்வாரி முறை
- இரயத்துவாரி முறை

**2. பசுமைப்புரட்சியின் பலவீனங்களைப் பட்டியலிடுக.**

- பருவ மழைகளை நம்பியிருக்கும் நிலையை இன்னும் மாறவில்லை
- விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தண்ணீருக்காக பேரளவு மூலதனம் தேவைப்படுகிறது
- பெரு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இடையேயான வருமான இடைவெளி அதிகரித்தது

**3. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?**

- இத்திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் தலா வருவாயை இருமடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது
- இத்திட்டம் 2012ம் ஆண்டில் வறுமை விகிதத்தை 15% ஆக குறைக்கும். குறிக்கோளைக் கொண்டிருந்தது.

**4. மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணைக் கணக்கிட உதவும் குறியீடுகளை கூறுக.**

$HDI_1$, $HDI_2$, $HDI_3$ மற்றும் $HDI_4$

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.**

- பொருளாதார திட்டமிடலின் முதன்மை நோக்கம் சமூக இலக்குகளை அடைவதற்கு உதவி செய்யத் தவறின
- ஆகையால் அரசு 14 பெரிய வணிக வங்கிகளை ஜூலை 19, 1969 அன்று தேசியமயமாக்க முடிவு செய்தது
- 1980ஆம் ஆண்டில் அரசு மேலும் 6 வணிக வங்கிகளை தேசியமாக்குகிறது.

www.Padasalai.Net

**2. 1991 ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையின் ஏதேனும் மூன்று நோக்கங்களைக் குறிப்பிடுக.**

- இந்திய தொழில்துறையை அரசு அதிகாரிகளின் பிடியில் இருந்து விடுவிப்பது
- இந்திய பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருமுகப்படுத்தும் வகையில் தாராளமயமாக்கல்
- நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் மேல் இருந்த கட்டுப்பாடுகளை தளர்த்துவது

**3. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி குறிப்பு வரைக**

- இதன் முதன்மை நோக்கம் விரைவான அதிகமான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியே ஆகும்.
- இதன் வளர்ச்சி இலக்கு 8% ஆகும்.
- பற்றாக்குறையான வளங்களைப் பயன்படுத்தி எவ்வாறு அதிகபட்ச பொருளாதாரப் பலன்களைப் பெறலாம் என்று இத்திட்டங்கள் வழிகாட்டியுள்ளன.

**4. PQLI என்றால் என்ன?**

- வாழ்க்கைத் தர குறியீட்டெணணை (PQLI) மோரிஸ் டி.மோரிஸ் (Morris Dmorris) உருவாக்கினார்.
- இது ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை அளவிடப் பயன்படுகிறது.

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி?**

- தேசிய மயமாக்கலின் முதன்மையான நோக்கம் சமூக நலத்தை அடைவதே யாகும்.
- தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தனியார் முற்றுரிமையைக் கட்டுப்படுத்துவதற்கும் சமூகத்தில் தேவையான பகுதிகளுக்கு இலகுவாகக் கடன் அளிப்பதற்கும் பேருதவியாக இருந்தன.
- இந்தியாவில் ஏறத்தாழ 70% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர்.
- சுதந்திரத்திற்கு முன் இருந்த வங்கிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை.
- வங்கி வசதிகள் இல்லாத இடத்தில் வட்டாரங்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உதவுகின்றன.

**2. இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி.**

- முதல் ஐந்தாண்டுத் திட்டம் - 1951 முதல் 1956 வரை
- இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் - 1956 முதல் 1961 வரை
- மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் - 1961 முதல் 1966 வரை
- நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் - 1969 முதல் 1974 வரை
- ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1974 முதல் 1979 வரை
- ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1985 முதல் 1990 வரை
- எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் - 1992 முதல் 1997 வரை

* * *

## பாடம் - 9

## இந்தியாவின் மேம்பாடு அனுபவங்கள்

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. தனியார் மயமாக்கல் என்றால் என்ன?**

தனியார் மயமாக்குதல் என்பது பொதுத்துறையின் நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவதைக் குறிக்கும்.

**2. முதலீட்டை திரும்பப் பெறுதல்-(Disinvestment) வரையறு.**

முதலீட்டு விலக்கல் என்பது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது

**3. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன?**

www.Padasalai.Net

அனுமதி வழங்குவதில் பெருக்கியிருந்த கட்டுப்பாடுகள், உள்கட்டமைப்பு வசதியின்மை, குறைவான நிதி போன்ற குறைபாடுகளைச் சமாளிக்கவும், நேரடி முதலீட்டை ஈர்க்கவும் உருவாக்கப்பட்டது சிறப்புப் பொருளாதார மண்டலம் ஆகும்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. விவசாய உற்பத்தி அங்காடிக் குழுவின்பணிகளை கூறுக.**

- வேளாண் சந்தைகளில் பொது மற்றும் தனியார்களிடையே கூட்டுறவை வளர்ச்சி பெறச் செய்தல்
- சந்தை சார்ந்த விரிவாக்க சேவைகளை விவசாயிகளுக்கு வழங்குதல்
- வேளாண் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

**2. GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக.**

பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும்.

**GST-யின் நன்மைகள் :**

- அடுக்குவரி விளைவுகளை நீக்கியது
- ஒருமுனை வரியாக உள்ளது
- பதிவுக்கான வாசலாக உள்ளது.

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.**

**SEZ-ன் முக்கிய நோக்கங்கள்:-**

- வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல்
- உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல்
- வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
- கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
- கூடுதல் பொருளாதார நடவடிக்களை உருவாக்குதல்

**SEZ-ன் முக்கிய இயல்புகள்:-**

- பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்
- தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது
- நெறிமுறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்
- தனிப்பட்ட விருப்ப பகுதியைக் கொண்டது
- தாராளமய பொருளாதார சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

* * *

## பாடம் - 10
## ஊரக பொருளாதாரம்

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. ஊரக பொருளாதாரம் - வரையறு.**

ஊரக பொருளாதாரம் பொருளாதார கொள்கைகளை பயன்படுத்தி, ஊரக பகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதைக் குறிக்கிறது.

**2. ஊரக வளர்ச்சி என்றால் என்ன?**

ஊரக மக்களின் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கை முறையை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட உத்தி ஆகும்.

**3. ஊரக ஏழ்மை - வரையறு.**

கிராமங்களில் காணப்படும் வறுமையை ஊரக வறுமை எனலாம்.

**4. குறுங் கடன் (Micro Finance) என்றால் என்ன?**

குறுநிதி என்பது குறுகடன்களைக் குறிக்கும்.

சிறு தொழில் முனைவோர் ஆகியோருக்கு வங்கி அல்லது முதலீட்டாளர் போல செயல்படுவதாகும்.

**5. ஊரக மின் மயமாக்கல்: வரையறு.**

ஊரக மின்மயாக்க் என்பது ஊரக பகுதிகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தித் தருவதாகும்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

www.Padasalai.Net

**1. SHG யின் பண்புகளைக் கூறுக.**

1). சுயஉதவிக்குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள்

2). பெரும்பாலான சுயஉதவிக்குழுக்கள் 10 முதல் 20 பெண்கள் உறுப்பினர்களை கொண்டவை.

3). SHGs தமக்கென்று வடிவமைக்கப்பட்ட சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன.

**2. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.**

1). குறுங்கடன் வழங்குவதில் நிலைத்தன்மையை ஏற்படுத்தல்

2). நிதி நிறுவனங்களுக்கு, மேலும் நிதி மற்றும் கடன் வசதியை ஏற்படுத்தி தருதல்

3). கடன் உத்தரவாத திட்டம் (CGS) ஆரம்பித்தல்

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை: விவாதி:**

- ஊரகம் ஒரு நிறுவனம்
- வேளாண்மையை சார்ந்திருத்தல்
- ஊரக மக்களின் வாழ்க்கை முறை
- மக்கள் தொகை அடர்த்தி
- வேலைவாய்ப்பு
- வறுமை
- கடன் சுமைகள்

**2. ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க**

- மக்கள் தொடர்புடைய பிரச்சனை
- வேளாண்மை சார்ந்த பிரச்சனை
- உள்கட்டமைப்பு சார்ந்த பிரச்சனை
- பொருளாதாரம் சார்ந்த பிரச்சனை
- தலைமை சார்ந்த பிரச்சனை
- நிர்வாகம் சார்ந்த பிரச்சனை
- சமூக மற்றும் கலாச்சாரம் சார்ந்த பிரச்சனை

**3. ஊரக கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.**

- விவசாயிகளின் ஏழ்மை நிலை
- பருவமழை பொய்த்தல்
- வழக்குகள்
- வட்டிக்கு கடன் தருவோர் மற்றும் அதிகவட்டி வீதம்

* * *

## பாடம் - 11
## தமிழ்நாட்டுப் பொருளாதாரம்

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. சாதகமான பாலின விகிதம் கொண்ட இரண்டு மாவட்டங்கள் கூறுக. விகிதங்கள் கூறுக.**

1). நீலகிரி (1041 பெண்கள்)

2). தஞ்சாவூர் (1031 பெண்கள்)

**2. மொத்த மாநில உள்நாடு உற்பத்தி - வரையறு.**

- மாநிலத்தில் ஓர் ஆண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.

**3. தமிழ்க்கேற்ற நான்கு உணவு பயிர்களை குறிப்பிடுக.**

- கம்பு, சோளம், நிலக்கடலை, கரும்பு

**4. தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகங்கள் யாவை?**

- சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகம்.
- நாகப்பட்டினம் நடுத்தர துறைமுகமாகும்.

**5. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?**

உலக பாரம்பரிய குவினால் நிர்வகிக்கப்படும் காடு, மலை, ஏரி, பாலைவனம் போன்ற இடங்களுக்கு செல்லும் சுற்றுலா பாரம்பரிய சுற்றுலா எனப்படும்.

**6. தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை?**

- கல்பாக்கம்
- கூடங்குளம்

www.Padasalai.Net

**7. குறு நிறுவனங்கள் - வரையறு.**

25 லட்சத்திற்கு மிகாமல் மூலதன முதலீடு கொண்டு நிறுவனங்கள் ஆகும்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. தமிழ்நாட்டின் கனிம வளங்கள் - குறிப்பு வரைக**

இரும்பு, நிலக்கரி, பாக்சைட்

**2. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி**

1). தமிழ்நாடு இந்தியாவின் நூல்கிண்ணம் என அழைக்கப்படுகிறது
2). 35 மில்லியன் மக்களுக்கு நேரடி வேலை வாய்ப்பை வழங்குகிறது
3). திருப்பூர் பின்னலாடை நகரம் என அழைக்கப்படுகிறது
4). ஈரோடு தென்னிந்தியாவின் முக்கிய ஜவுள சந்தையாக உள்ளது.

**3. சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான செயல்பாடுகளை விவரி**

1). தமிழ்நாடு அரசு மேற்பார்வையாளர் TTDC தமிழ்நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்துகிறது
2). 25 கோடி சுற்றுலாப் பயணிகளுடன் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது
3). இத்துறையின் ஆண்டு சராசரி வளர்ச்சி 16%

**4. தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?**

1). சூரியசக்தி மின்சாரம்
2). காற்றாலை மின்சாரம்

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி**

- புனல் மின்சாரம்
- சூரிய சக்தி மின்சாரம்
- காற்றாலை மின்சாரம்
- அணுமின் ஆற்றல்
- வெப்ப ஆற்றல்

**2. தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.**

**தமிழ்நாடு மிகச்சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது**

- சாலை வசதி
- இரயில் போக்குவரத்து
- வான்வழி போக்குவரத்து

* * *

## பாடம் - 12

## பொருளியலுக்கான கணித முறைகள்

**இரண்டு மதிப்பெண் வினா விடை:-**

**1. 62 = 34 + 4X என்றால் X இன் மதிப்பு காண். (தீர்வு x=7)**

62 = 34+4x
34+4x = 62
4x = 62-34
x = 28/4
**x = 7**

**2. அளிப்புச் சார்பு கொடுக்கப்பட்டுள்ளபோது அளிப்பு நெகிழ்ச்சி கெழு காண சூத்திரம் என்ன?**

Es=(P/q) (dq/dp)

**3. MS Word-ன் முக்கிய அம்சங்கள் யாவை?**

1). ஆவனத்தை உருவாக்க நகலெடுக்க திருத்தியமைக்க வடிவமைக்க முடியும்
2). பிழைத்திருத்தம் செய்யும் வசதி உள்ளது
3). பல ஆவனங்களை ஒன்றாக இணைக்க முடியும்.

**மூன்று மதிப்பெண் வினா விடை:-**

**1. கணித முறையின்பொருளாதாரப் பயன்பாடுகளை விளக்குக.**

- பொருளியல் பிரச்சனைகளை சுருக்கமான வடிவில் வழங்க உதவுகிறது
- பொருளியல் கருத்துக்களை சுருக்கமாக விளக்கிட உதவுகிறது
- பொருளியல் ஆய்வு முறைகளில் அதிகம் பயன்படுகிறது.

**2. 16x − 4 = 68 + 7x என்றால் தேவையளவு x மதிப்பினை தீர்க்க. (தீர்வு x=8)**

16x-4 = 68+7x
= 16x-7x = 68+4
= 9x-72
x = 72/9
**x = 8**

**3. MS Excel Sheet செயல்படுத்துவதில் உள்ள நிலைகளை விளக்குக.**

**ஆரம்பம் :** பல்வேறு முறைகளில் MS Excel-ஐ பயன்படுத்தலாம். Click Start - Program - Micro excel அல்லது Desktop MS Excel-ஐ காண இருமுறை கிளிக் செய்யவும்.

**பணித்தாள் :** சூத்திரம் மற்றும் தரவுகளை நிரைகளாகவும், நிரல்களாகவும் தருவதற்கு ஏற்ப அட்டவணை வடிவிலான ஆவணமே பணித்தாள் எனப்படுகிறது.

**ஐந்து மதிப்பெண் வினா விடை:-**

**1. பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?**

1). புள்ளி விவரங்களை தொகுத்தல்
2. ஒழுங்குற அமைத்தல்
3). கையாளுதல்
4). கணக்கிடுதல்
5). முடிவுகளை காட்சிப்படுத்துதல்

ஆகிய கணிதப் புள்ளியியல் கருத்துகள் பொருளியலுக்கு தேவைப்படுகின்றன. SPSS மற்றும் Excel தொகுப்புகள் பொருளியல் ஆய்வாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

* * *

www.Padasalai.Net